


# தலைப்பு: கடற்கரை

**வழங்கியோர்**

மாலை நேரத்தில்

மனக் கவலைகளை மறக்க

கடற்கரை சென்றேன் !

அலைகடலின் அழுகுரல் கேட்டேன் !

மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது !

என் நினைவுஅலை

நீயும் ! நானும் ! நாமாக வாழ்ந்த பசுமையான

அந்த நாட்களை தேட!

*கவிதாயினி சை.சபிதா பானு (காரைக்குடி)*

(கலிவெண்பா)

அழகுநல் மாலை ஆதவனும் நிற்க

மழலைகளும் தொட்டுமொரு மண்வீடும் கட்ட

நுரையோடும் தள்ளி நுகர்ந்திடவே காணும்

கரையோடும் ஓங்கிவர காட்சிபல தந்தும்

நிலவுமது வெண்திரையை நீரினிலே வீழ்த்திவிட

நீலக்கடல் தாயைவேண்டி நீர்மூழ்கி முத்தெடுக்க

சிப்பியோடு சங்கும் சிரித்துமது பேசுமே

உப்புடனே மாங்காயும் ஊர்மனையைத் தாண்டுமே

உல்லாசம் தேடிவரும் உலகத்து மக்களே

கல்மணலில் கால்நீட்டி கண்ணுறங்கும் வேளையிலே

தென்றலோடு கேட்குமொரு தெம்மாங்கு கீதமாம்

பொன்னான பொழுதுடனே பொங்கிவரும் சாலையிலே

கண்ணான நாளாகும் காண்பு.

*சரளா விமலராஜா*
*சுவீஸ்,*

LIFE LITERARY ASSOCIATION - SINGAPORE